முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சத்யானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

29.03.2019, வெள்ளிக்கிழமை

1. **சற்குருவாய் வந்தருளும் அரங்கா**
**சங்கடங்கள் போக்கிக் காத்தருளும்**
**அற்புத ஞானம் அருளும் தேசிகா**
**அகிலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே நித்ய பிரசன்ன ஆசியை
குறையிலா **விளம்பி சேல் திங்கள்**
**தெரியவே மூவைந்து திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 15ம் நாள் 29.03.2019, வெள்ளிக்கிழமை)**
**தேசிகனுக்கு சத்யானந்தர் யானும்**
3. யானும் உலகோர் நலமுற உரைப்பேன்
உயர்வை கலியுகத்தில் தரவே
ஞானதேசிகனார் தானுமே
நாட்டிடுவேன் முழுமதி பூசையாக
4. ஆகவே பிரணவக் குடிலில் எடுத்து
அகிலத்து மக்களை அழைக்க
யுகமக்களே முழுமதி என்பது
உயர்வுபட முழுமை பெற்ற ஞானிகள்
5. ஞானிகள் சித்திக்கு உகந்த நாள்
ஞானவரம் எளிதில் கிடைக்கும் நாள்
கனிவு கொண்டு வானவர்களும்
கலி இடரை போக்குகின்ற நாள்
6. நாளதை அரங்கனே ஏற்று
நன்மைபட தான தருமமுடன்
காலனை வெல்லும் மகா சக்தி
கந்தவேலன் பூசையாக செய்துவர
7. வருகின்ற எல்லா மக்களுக்கும்
வரமுண்டு அரங்கனிடத்தில்
தருமமென தருகின்ற யாவருக்கும்
தக்க பலமும் நெடிய ஆயுளும் கூடும்
8. கூடுமே வளர்ச்சி நிலைகள்
குறைவில்லா மன பலமுடன்
நாடுமே சகல மாற்றங்களும்
ஞானிகள் அருளும் ஆசியும் கூடும்
9. கூடாத எதிர்மறை செயல்கள்
குவலயத்தில் அணுகா அகன்று
ஈடேறும் ஞானப் பண்புகள்
என்றும் நிலைபெறும் தன்மை கூடி

10. கூடியே அழியாமை பெறுகின்ற
கும்பகம் திடம் வசியம் வாசி வழி
நாடியே ஆறுமுகனால் வசமாகி
ஞானிகள் ஆவர் தொடரும் மக்கள்
11. மக்களை காக்கும் தலைவன் நீயே
மண்ணுலக மீட்பின் ஞானகுரு நீயே
தேக்கமில்லை அரங்கா உன் சேவைக்கு
தேடி உலகோர் இணையவே கலிஇடர் விலகும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சத்யானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

மக்களின் அறியாமை எனும் இருளைப் போக்கி ஞானஒளி காட்டி மக்களை வழிநடத்திட அவதாரமாக சற்குருவாக வந்திட்ட அரங்கமகா தேசிகனே, மக்களின் சங்கடங்களை போக்கிக் காத்து அருள் செய்கின்ற தேசிகா, அற்புதமான ஞானம்தனை மக்களுக்கு அருளும் ஞானதேசிக, இவ்வுலகினில் அற்புதம்மிக்க உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 15ம் நாள் 29.03.2019, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே சத்யானந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சத்யானந்தர்.

கலியுக மக்களுக்கு உயர்வான நிலையினை அருளிக் காக்கவே ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தினிலே முற்றுப்பெற்ற ஞானிகளை முருகப்பெருமான் தலைமையில் சிறப்பு சித்தர்கள் வழிபாடுகளை ஏழாம் படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடிலினிலே எடுத்து, உலக மக்களை அற்புத பூசைகளிலே கலந்து கடைத்தேறிட அழைப்பு விடுக்கின்றார்.

உலக மக்களே முழுமதியாகிய பௌர்ணமி என்பது மேன்மைமிக்க முழுமை பெற்ற ஞானிகள் சித்திக்கு உகந்த நன்னாளாகும், ஞானவரம் எளிதில் கிடைக்கும் பொன்னாள் ஆகும். தேவர்களும் ஞானிகளும் மிகுந்த கனிவுடன் கலியுகத்தின் துன்பங்களை நீக்குகின்ற அற்புத நாளாகும்.

இப்படிப்பட்ட பௌர்ணமி தினமதனிலே ஆறுமுக அரங்கமகா தேசிகனார் தேர்ந்தெடுத்து அந்த நன்னாளிலேயே உலகம் நன்மைபெற வேண்டி தானதருமங்களுடன் எமனையும் வெல்லும் மகா சக்திமிக்க முருகப்பெருமானின் தலைமையில் முருகப்பெருமான் பூஜையாக செய்து வருகின்றார்.

ஆதலினாலே அன்றைய தினத்தினிலே ஓங்காரக்குடிலினை பயபக்தியுடன் பணிந்து நாடி வந்து, ஆங்கே நடக்கும் பௌர்ணமி பூஜைகளிலே கலந்து வழிபாடுகளை செய்கின்ற மக்களுக்கு அரங்கமகானின் வரங்கள் உண்டப்பா. ஆங்கே நடக்கும் தானதருமப் பணிகளுக்கு பொருளுதவிகள் செய்கின்றவர்களுக்கு தகுந்த பலமும், நீடிய ஆயுளும் அரங்கன் அருளால் உண்டாகும்.

அவர்களது வாழ்வினிலே அதுமுதலாய் வளர்ச்சிகள் பெருகிடும், மனோபலம் பெருகும், அவர்களது வாழ்வினில் நல்ல மாற்றங்கள் விரைந்து உண்டாகும், ஞானிகளின் அருளும் ஆசியும் பெருகிடும்.

மக்களின் மனதிலே உண்டாகும் எதிர்மறை எண்ணங்கள் மாறும், உலகினில் உண்டாகும் தீவிரவாத எதிர்மறை செயல்கள் எல்லாம் மக்களை அணுகாது விலகி ஓடும். மக்களிடத்து ஞானப்பண்புகள் பெருகிடும். மக்கள் மரணம் வெல்லும் மார்க்கம் அறிந்து அழிவிலாத நிலையை பெறும் வாய்ப்பாக அவர்களுக்குள்ளே வாசி வசப்படுதலின் படிநிலையான கும்பகமும் திடமாகும். வாசியும் வசப்படும் நிலை உருவாகி வாசியின் மூலமாக வசப்படுதலாகிய நிலை முருகப்பெருமானின் அருளினால் முருகப்பெருமானால் வசமாகி ஞானிகளாகவும் ஆகும் வாய்ப்பினை அரங்கன் நடத்தும் பௌர்ணமி சிறப்பு ஞான பூசைகளில் தவறாது தொடர்ந்து கலந்து தானதருமங்களை செய்து ஞானிகள் ஆசியையும், அரங்கபெருமான் ஆசியையும், ஞானபண்டிதன் ஆசியையும் பெறுவோர் வாசி வசம் பெற்று சிறப்பார்கள்.

உலக மக்களைக் காக்கும் ஞானத்தலைவன் அரங்கா நீயே அப்பா, மண்ணுலகை மீட்டு காக்கும் ஞானகுருவும் நீயே அப்பா, எந்தவிதமான தடைகளும் இனியில்லை, அரங்கனின் தொண்டுக்கும் சேவைக்கும் உலக மக்களெல்லாம் அரங்கனை பின்தொடர்ந்து இணைந்து வர, உலகினில் கலியுகத் துன்பமெல்லாம் நீங்கி ஞான வாழ்வு பெறுவார்கள் எனக் கூறுகிறார் மகான் சத்யானந்தர்.

–சுபம்–